FIRST INFORMATION REPORT TAMIL NADU POLICE

under Section 173 BNSS **முதல் தகவல் அறிக்கை** INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 154 Cr.P.C) C 8129808

(குற்றவியல் தொ.பிரிவு 154 இன் கீழ்)

1. District : **Tenkasi** P.S: **Vigilance and Anti Corruption** Year **2025** FIR No. **07/2025** Date **09.10.2025**
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: **PC Act, 1988 as amended in Act 16 of 2018.** Sections பிரிவுகள்: **7**

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : **08.10.2025** Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் **15.00 hrs** நாள் வரை

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : **09.10.2025** Time **08.00 hrs**
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) **09.10.2025** Time **08.00 hrs**
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : **Written**
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: **Village Administrative office, Periyoor Village 50 Km North East**
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : **M.THANGARAJA** (b) Father's/ Husband's Name : **Tr.MURUGAN**
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : **30.05.1987** (d) Nationality : **INDIAN** (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : **Pvt. Employee** (g) Address : **41/4, METTU THERU, NALATINPUDHUR, KOVILPATTI TALUK, THOOTHUKUDI DISTRICT.**
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.Rajkumar, Village Administrative Officer, Periyur Village, Sankarankovil Taluk, Tenkasi District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 09.10.2025-ம் தேதி காலை 08.00 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் C.ஜெயஸ்ரீ ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி தாலுகா நாலாட்டின்புதுரை சேர்ந்த திரு.M.தங்கராஜா என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவை பெற்று, இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட சங்கரன்கோவில் தாலுகா பெரியூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.ராஜ்குமார் பற்றியும் ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்து, புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 09.10.2025-ம் தேதி காலை 09.00 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2025 u/s 7 of the PC Act 1988 as Amended in Act 16 of 2018 என வழக்குப் பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு M.Thangaraja 09/10/25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
09-10-25 at 10:00hr.

Name: பெயர் C. JAYASREE
Rank: நிலை INSPECTOR OF POLICE

M.தங்கராஜா, வயது 38/25 த/பெ.S.முருகன், க.எண். 41/4, மேட்டு தெரு, நாலாட்டின்புத்தூர், கோவில்பட்டி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, தென்காசி மாவட்டம். ஐயா, நான் எனது மனைவி குழந்தைகளுடன் நாலாட்டின்புத்தூரில் வசித்து வருகிறேன். எனது மாமனார் சண்முகவேலுக்கு சொந்த ஊர் சங்கரன்கோவில் தாலுகா, பாஞ்சாங்குளம் அஞ்சல், பெரியூர் கிராமம் ஆகும். எனது மாமனாருக்கு கரிவலம்வந்தநல்லூர் சார்பதிவக செட்டில்மெண்ட் ஆவண எண்.1759/2021-ன் படி பெரும்பத்தூர் கிராமத்தில் ஒரு வீடும், 34½ சென்ட் இடமும், பெரியூர் கிராமத்தில் சர்வே எண் 338/1, 312/4A மற்றும் 319/2C ஆகியவற்றில் 2 ஏக்கர் 8.5 சென்ட் இடம் பாத்தியப்பட்டதாகும். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் படி பெற்ற சொத்துக்களில், 60½ சென்ட் இடத்தினை எனது மனைவி தங்கேஸ்வரிக்கும், 34½ சென்ட் இடத்தினை எனது இரண்டு மைத்துனர்களுக்கும் பிரித்து எழுதி கொடுத்ததுபோக, மீதமுள்ள 3 சொத்துக்கள் எனது மாமனார் பெயரில் உள்ளது. அதில் பெரியூர் கிராம சர்வே எண். 319/2C-ல் உள்ள ஒரு ஏக்கர் புஞ்சை நிலம் பட்டா எண்.5517-ன் படி கூட்டுப்பட்டாவில் எனது மாமனார் சண்முகவேல் மற்றும் 4 பேர் பெயர்களில் கூட்டாக உள்ளது. ஆனால் மேற்படி சொத்தானது எனது மாமனாருக்கு மட்டும் பாத்தியப்பட்டதாகும். அதனால் மேற்படி கூட்டுப்பட்டாவில் இருந்து தனிப்பட்டா வாங்க எனது மாமனாரும், எனது மனைவியும் பலமுறை சங்கரன்கோவில் தாலுகா அலுவலகம் மற்றும் RDO அலுவலகத்தில் மனு கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தது. தற்போது எனது மாமானாரால் தொடர்ந்து அலைய முடியாததால் தனிப்பட்டா வாங்குவது தொடர்பாக என்னை பார்க்க சொல்லியிருந்தார். நானும் கடந்த செப்டம்பர் மாதத்தில் இருந்து கூட்டுப்பட்டாவில் இருந்து தனிப்பட்டா வாங்குவது தொடர்பாக பெரியூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.ராஜ்குமார் அவர்களை பலமுறை சென்று சந்தித்து விபரம் கேட்டபோது ஆவணங்களின் நகலை கேட்டார். நானும் அவர் கேட்ட ஆவணங்களின் நகல் பெற்று கொடுத்தேன். பின்பு கடைசியாக 29.09.2025-ம் தேதி மாலை சுமார் 4 மணியளவில் சங்கரன்கோவில் நீதிமன்றம் முன்பு அவரை சந்தித்தபோது அவர் ஆவணங்களை பார்த்துவிட்டேன். ஆவணங்கள் சரியாக உள்ளது, பட்டா பெயர் மாற்றம் செய்ய ரூ.20,000/- ஆகும் என்றும், ஆன்லைனில் விண்ணப்பியுங்கள் பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னார். நான் எனது பெயரில் சொத்து கிடையாது, எனது மாமனாரிடம்தான் கேட்க வேண்டும் ஏதாவது

குறைத்துக்கொள்ளலாமா என்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.15,000/- கொடுங்கள் என்று சொன்னார். நான் எனது மாமனாரிடம் கேட்டு சொல்கிறேன் என்று சொன்னதும் அவர் இன்று விண்ணப்பித்தால் 10-ம் தேதிக்குள் உங்கள் மனு சீனியாரிட்டி படி வந்துவிடும், அதற்குள் பணத்தை கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். நான் சங்கரன்கோவில் தாலுகா அலுவலகத்திற்கு வந்து அங்குள்ள 'இ' சேவை மையத்தில் எனது மாமனார் பெயரில் தனிப்பட்டாவுக்கு விண்ணப்பித்துவிட்டு சென்றுவிட்டேன். தனிப்பட்டா மாறுதல் சம்மந்தமாக எந்த விபரமும் தெரியாததால் நான் நேற்று 08.10.2025-ம் தேதி மாலை சுமார் 3.00 மணியளவில் பெரியூர் VAO அலுவலகம் சென்று VAO திரு.ராஜ்குமார் அவர்களை பார்த்தபோது அவர் பணம் ரூ.15,000/- கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். நான் எனது மாமனார் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னார், கொஞ்சம் குறைத்துக்கொள்ளலாமா என்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.10,000/- நாளைக்கு கொடுத்தால்தான் தனிப்பட்டா வழங்க பரிந்துரை செய்யமுடியும், இல்லை என்றால் மனுவை தள்ளுபடி செய்துவிடுவேன் என்று சொல்லிவிட்டார். நானும் அப்போதைக்கு சரி என்று சொல்லிவிட்டு, நான் நாளைக்கு எப்போது வரவேண்டும் என்று கேட்டபோது, அவர் நாளைக்கு ஆபிசுக்கு வாங்க நான் இல்லையென்றால் போனில் பேசுங்கள் என்று சொன்னார். மேற்படி தகவலை எனது மாமனாரிடம் சொன்னதற்கு, நம்மிடம் ஆவணங்கள் சரியாக உள்ளது, லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை என்ன செய்யலாம் என்று கேட்டார். நான் லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கலாம் என சொன்னேன். அதற்கு அவரும் சரி என்று சொன்னார். எனவே, என்னிடம் எனது மாமனார் திரு.சண்முகவேல் பெயரில் தனிப்பட்டா வழங்க லஞ்சமாக ரூ.10,000/- கேட்ட பெரியூர் VAO திரு.ராஜ்குமார் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd.(THANGARAJA), 09.10.2025.

Sir, Received the petition on 09.10.2025 at 08.00 hrs, conducted confidential enquiry and obtained oral permission from Superintendent of Police, Southern Range, DVAC, Chennai and I registered a case in Tenkasi V&AC Cr.No.07/2025 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16 of 2018 on 09.10.2025 at 09.00 hrs sd.C.Jayasree, Inspector of Police, V&AC, Tenkasi. 09.10.2025.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி நீதிமன்றம், தென்காசி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

9/10/25

C. JAYASREE
INSPECTOR OF POLICE
V&AC TENKASI